செ.வெ.எண்: 970 நாள்: 08.11.2008

<u>செய்தி வெளியீடு</u>

மேதகு பெல்ஜியம் மன்னர் திரு. இரண்டாம் ஆல்பர்ட் மற்றும் அரசியார் திருமதி பவுலா அவர்களும் அரசு முறை பயணமாக கடந்த 03.11.2008 முதல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வருகின்றனர்.

179 நபர்கள் அடங்கிய குழுவுடன் மேதகு பெல்ஜியம் மன்னர் திரு. இரண்டாம் ஆல்பர்ட் மற்றும் அரசியார் திருமதி பவுலா அவர்களும் ஐந்து நாள் சுற்றுப்பயணமாக தனி விமானம் மூலம் 08.11.2008 அன்று மாலை 8.00 மணிக்கு சென்னை வந்தடைந்தனர். அவர்களுக்கு தமிழக முதலமைச்சர் அவர்களின் சார்பாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் சிறப்பான முறையில் வரவேற்பு அளித்தனர். 10.11.2008 அன்று மேதகு ஆளுநர் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசுவார்கள். அதனைத் தொடர்ந்து மேதகு ஆளுநர் அவர்கள் மேதகு மன்னர் மற்றும் அரசியார் ஆகியோருக்கு ஆளுநர் மாளிகையில் விருந்து அளிக்க உள்ளார்.

இப் பெல்ஜிய நாட்டு குழுவினர் சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன் சென்னை பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் இரு நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான கல்வி அமைப்புமுறை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (Memoranda of Understanding) கையெழுத்திட உள்ளார்கள். தமிழகத்தில் வரலாற்று சிறப்பு மிக்க மாமல்லபுரம், சாந்தோம் புனித தோமையர் பேராலயம் மற்றும் மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில் போன்ற சுற்றுலா தலங்களையும் பார்வையிட உள்ளார்கள்.

மேலும் மேதகு அரசியார் அவர்கள் வருகிற 11.11.2008 செவ்வாய் கிழமையன்று திருச்சி சென்று அங்கு தன்னார்வ அமைப்பினரால் நடத்தப்படும் தொண்டு நிறுவன இல்லத்தை பார்வையிட உள்ளார்கள். பின்னர் அன்று மாலை சென்னை திரும்பவுள்ளார்கள்.

மேதகு பெல்ஜியம் மன்னர் மற்றும் அரசியார் அவர்கள் தமிழக சுற்றுப் பயணத்தினை முடித்துக் கொண்டு 12.11.2008 புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் தனி விமானம் மூலம் பெல்ஜியம் புறப்படவுள்ளார்கள்.

**வெளியீடு, இயக்குநர்**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை-9**